IMPACT FACTOR- 4.520 ISSN NO- 2456-7078

Volume-1, Issue-VI, Sept- 2017

# Research maGma

## An International Multidisciplinary Journal

## CONFERENCE

of

## Thiruvalluvar University College of Arts & Science, Arakkonam.

on

# "EMERGING TRENDS IN ENGLISH LANGUAGE & LITERATURE”

Research maGma
An International Multidisciplinary Journal
ISSN NO- 2456-7078 IMPACT FACTOR- 4.520 VOLUME-1, ISSUE-7, SEPT-2017

# புறநானூற்றில் மனிதநேயம்

[1]முனைவர்.இரா.ஜெயந்தி மற்றும் [2]லோ.ஜீவா
[1]உதவிப் பேராசிரியர மற்றும் தமிழ்த்துறைத் தலைவர் [2]ஆய்வியல் நிறைஞர்,
[1இ2]தமிழாய்வுத்துறை, ஸ்ரீ விஜய் வித்யாலயா கலை மற்றும் அறிவியல் கல்லூரி (மகளிர்), தருமபுரி.

ஆய்வுச்சுருக்கம்:

செம்மொழி இலக்கியங்களில் தலையாய இடத்தில் வைத்துப் போற்றப்படுவது தமிழ் இலக்கியமாகும். பழந்தமிழ் இலக்கியம் எனப்படும். சங்க நூல்கள், தமிழ் மொழிக்கு பெருமை சேர்க்கின்றன .உலகிற்குத் தனித்துவம் மிகுந்த கலாச்சாரத்தையும், பண்பாட்டினையும் அறிமுகப்படுத்திய பெருமை தமிழர்களுக்கும், அவர்தம் இலக்கியங்களுக்கும் உண்டு. ஒரு சமுதாயத்தின் பண்பாடு, வரலாறு, நாகரிகம், கல்வி, வாழ்க்கைமுறை, இயற்கை போன்றவற்றை எடுத்துக்கூறுவது இலக்கியம். இலக்கியம் தோன்ற பல்வேறு காரணங்கள் சொல்லப்பட்டாலும். சமூகத்தின் முன்னேற்றத்திற்கு இலக்கியம் மிகவும் பயன்படுகிறது. சங்க இலக்கியங்கள் இயற்கையைச் சார்ந்தும், காதல், வீரம், மனிதநேயம் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டும் பாடப்பெற்றன இவற்றினை அகம், புறம் என இரண்டாகப் பிரித்துச் சொல்லப்பட்டன. எனவே இலக்கியங்கள் மனிதச் சமுதாயத்தின் காலக் கண்ணாடியாக விளங்குகிறது. சங்க இலக்கியத்தில் எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான“புறநானூற்றில் மனிதநேயம்”என்ற தலைப்பில் ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

மூல வார்த்தைகள்:

சங்க நூல்களஇ மனிதநேயம்.

## பெண்ணியம்:

இவ்வுலகத்தில் உன்னதமாகப், போற்றப்படுவது மனிதநேயம். நேயம் என்றசொல் அன்பு, பாசம், இரக்கம், பரிவுபோன்றவற்றைக் குறிக்கும். ஒருவருக்கு தீங்கு ஏற்படுத்தாததும், தீங்கு ஏற்பட்டால் அதனைப் போக்குவதும், பிறர்க்கு துன்பம் ஏற்பட்டால், அதனைக் கண்டு கண்ணீர் விட்டு கதறுவதும் மனிதநேயம் ஆகும். ஒருவருக்கு உள்ளத்தால் கூட துன்பம் ஏற்படுத்த நினைக்கக் கூடாது என்பதனை வள்ளுவர்,

“உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன் பொருளைக்
கள்ளத்தால் கள்வேம் எனல்.” (குறள்.282)

என்று கூறுகிறார். பிறர் பொருள் மீதுநாட்டம் ஏற்பட்டால் தீய சொற்களும், எண்ணங்களும் மனதில் தோன்றும். அதனால் மற்றவர்களுக்கு துன்பம் விளைவிக்க

மனிதன் தயங்கமாட்டான். ஆகவே நன்னெறிகளை மனதில் கொண்டுபிறர் உணர்வுகளுக்கு மதிப்பளித்து மனிதன் வாழவேண்டும். இதுவே மனிதநேயம்மிக்க செயலாகக் கருதப்படுகிறது. உயிர் உள்ளவரை மற்றவர்களுக்கு பயன்தரும் வகையில் வாழவேண்டும். இக்கருத்தையே சங்க இலக்கியங்களும் உணர்த்துக்கின்றன.

## போரில் மனிதநேயம்

போர் மேற்கொள்ள விரும்பும் அரசன், பகைவன் நாட்டில் உள்ள பசுக்களை முதலில் கவர்ந்து வருவான். போரினால் அப்பசுக்கள் துன்பம் அடையக்கூடாது என்னும் மனிதநேயச் சிந்தனை அவர்களிடம் இருந்தது. இதனைப் புறநானூறு,

"ஆவும் ஆனியற் பார்ப்பனமாக்களும்
பெண்டிரும் பிணியுடையீரும் பேணித்." (புறம்-9,)

எனக் குறிப்பிடுகிறது. பசுமட்டும் இல்லாமல் பெண்கள், குழந்தைகள், அந்தணர், முன்னோர் வழிபாடு செய்வோர், புதல்வரைப் பெறாதவர்கள் அனைவரும் பாதுகாப்பான இடத்திற்குச் செல்லும்படி கூறியப்பின்னரே போர் தொடங்கப்பட்டுள்ளது. பகைவனையும் அன்பு செய்யவேண்டும் என்பதை வள்ளுவர்,

"பேராண்மை என்பதறுகண் ஒன் றுற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எ.்.கு." (குறள்.773)

என்றுக் குறிப்பிடுகின்றார். புகைவரை எதிர்த்து போர் செய்வதை ஆண்மை என்றுக் கூறுவர். ஆனால் அப்பகைவருக்கு துன்பம் வரும்போது அவருக்கு அன்புடன் உதவிச் செய்வதே சிறந்தமனிதநேயப் பண்பாகக் கருதப்படுகிறது.

மனிதநேயபண்பை கலித்தொகையும் எடுத்துக் கூறுகிறது. யுானைகளை நீர் நிலைகளுக்கு நீராடக் கொண்டு செல்லும் போது தெருவில் விளையாடும் குழந்தைகளுக்கு எவ்விதத் துன்பமும் ஏற்படாத வண்ணம் அழைத்துச் செல்ல வேண்டும் .யானைப்பாகனோடு வருவதற்கு முன்பாகத் தெருவில் பறையறைந்து எச்சரிக்கை செய்ய வேண்டும் என்ற உயரிய இரக்கக் குணத்தைக் கலித்தொகை,

"நிறை அழிகொல' யானை நீர்க்கு விட்டாங்குப்
புறை அறைந் தல்லது செல்லற்க என்னா
இறையே தவறுடையான்."
(கலி.56,)

என்று விளக்குகிறது. ஆனால் இக்கால சூழலில் தீவிரவாதம் என்றபெயரில் மனிதநேயம் என்ற பண்பு மறைந்தே போய் விட்டது.

மக்களிடம் மனிதநேயம்

ஓர் அரசன் தன் நாட்டின் நீர் நிலைகளைப் பெருக்கி மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதே அவனது தலையாயக் கடமையாகும். நாட்டில் தண்ணீர் பிரச்சனை இல்லாமல் இருந்தால் விவசாயம் செழித்து மக்கள் துன்பம் அடையாமல், மகிழ்ச்சியாக வாழ்வார்கள். இதனை புறநானூறு,

"நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசினோரே."
(புறம்.18)

எனக் குறிப்பிடுகிறதுஇ .உடலானது நீரினாலும் உணவாலும் ஆனது. ஆகவே நீர் நிலைகளை ஏற்படுத்தி அதனைப் பேணிக்காப்பவனே உண்மையான மன்னன் ஆவான். அவ்வாறு உள்ள மன்னனே மக்களால் போற்றப்பட்டான். மக்களின் மனம் அறிந்து, வரிப் பெற்று ஆட்சித் செய்யவேண்டும். இக்கருத்தை நற்றிணை.

"மரம்சாமருந்துங் கொள்ளார், மாந்தர்
உரம்சாச் செய்யார் உயர்தவம், வளம்கெடப்

பொன்னும் கொள்ளார் மன்னர்."

(நற்.226)

ஏன வலியுறுத்துகிறது. இதனையே வெற்றிவேற்கை,"மன்னவர்க்கழகு செங்கோன் முறைமை" என்று கூறுகிறது. அதாவது ஒருநாட்டினை ஆளும் மன்னருக்கு சிறப்புத் தருவது மக்களை செம்மையான முறையில் காத்து, நீதிமுறை தவறாமல் ஆட்சித் செய்வதாகும். இன்றையச் சூழலில் மக்கள் தண்ணீா் பிரச்சனையில் சிக்கித் தவிக்கின்றனா். அரசியல் நடத்துபவா்களும் அவா்களின் நலனையே பெரிதும் விரும்பி செயல்படுகின்றனா். அக்காலத்தில் நீதி தவறாமல் ஆட்சி நடந்தது. இன்று நீதி இல்லாமல் ஆட்சி நடக்கிறது. அரசியலில் இருப்பவா்கள் ஊழல், வன்முறையில் ஈடுபடுதல் போன்றவற்றைத் தவிர்ந்து நல்லாட்சி நடந்தவேண்டும். அப்பொழுதுதான் நாடு சிறப்புடையதாக இருக்கும்.

## கோவூர்கிழாரின் மனிதநேயம்

சோழன் நலங்கிள்ளியின் நாட்டில் இருந்து நெடுங்கிள்ளியின் நாட்டிற்கு இளந்தத்தன் என்னும் புலவன் பரிசில் வேண்டிவந்தான். ஆவனை ஒன்றன் எனக் கருதிய நலங்கிள்ளி கொல்ல நினைத்தான். இதனையறிந்த கோவூர்கிழார் நெடுங்கிள்ளிக்கு அறிவுரை கூறி இளந்தத்தனைக் காக்கும் மனிதநேய மாண்பு குறிப்பிடத்தக்கது, இதனை,

"பெற்றது மகிழ்ந்து சுற்றமருந்தி
ஓம்பாதுண்டு கூம்பாதுவீசி
வரிசைக்கு வருந்துமிப் பரிசில் வாழ்க்கை
பிறா்க்குத் தீதறிந் தன்றோ இன்றே."

(புறம்.47)

என்று கூறுகிறது .பரிசில் பெற்று வாழும் இப்புலவா் பிறா்க்குத் தீங்கு நினைக்காதவா். பொருளை பாதுகாக்க எண்ணாத பண்புடையவா் என்று நலங்கிள்ளிக்கு எடுத்துக்கூறினாா்.

கிள்ளி வளவன் தன் பகைவனாக இருக்கும் மலையமானின் குழந்தைகளை யானையின் காலடியில் இட்டுக் கொல்ல நினைத்தான் இச்செயலை அறிந்தகிழார் அதனைத் தடுக்க முனைத்தார், இதனை,

"களிறுகண்டழூஉம் அழாஅல் மறந்த
புன்றலைச் சிறாஅர் மன்று மருண்டுநோக்கி
விருந்திற் புன்கன் நோவுடையர்.
கேட்டனையாயின் நீவேட்டது செய்ம்மே."

(புறம்.46)

எனப் பாடுகிறார். நீ புறாவின் துன்பம் மட்டுமின்றிப் பிற உயிர்களின் துன்பத்தையும் போக்கிய சோழனின் வம்சம். யானையைப் பார்த்து அழுகையை மறந்த இச்சிறுவர்களைக் கொல்வது உனக்குதகாத செயல் என எடுத்துரைப்பது மனிதநேயத்தின் மாண்பாக கருதப்படுகிறது. இதனை வெற்றிவேற்கை"பழியாவருவது மொழியாதொழிவது"எனக் கூறுகிறது. துன்பத்தை விளைவிக்கும்படி வரும் செயல்களைக் கைவிடு வதுநல்லது .உண்மையான அன்பு இருக்கும் இடமே இறைவன் குடியிருக்கும் ஆலயமாகும். எனவேநாம் அனைவரிடமும் உண்மையான அன்பு செலுத்தி, பிறர் துன்பம் நீக்கி, மனிதநேயத்துடன் வாழ வேண்டும்.

## பெருஞ்சித்திரனாரின் மனிதநேயம்

மூவன் என்ற மன்னனை வாழ்த்திப் பரிசல் பெறுவதற்காக பெருஞ்சித்திரனார் செல்கிறார். மன்னனையும் வாழ்த்திப் பாடுகிறார். ஆனால் மன்னன் பரிசில் வழங்கவில்லை. அதற்காக அம்மன்னன் மீது கோபம் கொள்ளாமல் பெருந்தன்மையோடு பாடுகிறார். இதனை,

"நசைதரவந்துநின் இசைநுவல் பரிசிலென்

வறுவியேன் பெயர்கோ? வாள் மேம்படுந!
ஈயாய் ஆயினும், இரங்குவென் அல்லென்."

(புறம்.209)

எனக் கூறுகிறது. பழுமரம் தேடும் பறவை போலநான் உன்னை தேடிவந்தேன். நீபரிசில் கொடுக்கவில்லை. ஆயினும் நான் வருந்தமாட்டேன். நோயின்றி நீ வாழ்வாயாக எனவாழ்த்துகிறார். இம்மனிதநேய மாண்பு தமிழனுக்கு மட்டுமே உண்டு.

## முடிவுரை

மிகுந்த கோபம், காமம், பகைவர்க்கு அஞ்சுதல், பொய் கூறுதல், பொருள்களின் மீதுபற்று, மிகுதியான தண்டனை அளித்தல் அகியவை அரசனை அறவழியில் ஆட்சி செலுத்த விடுவதில்லை. ஒருவன் தான் அனுபவிக்கும் இன்பத்திற்கும், துன்பத்திற்கும் அவன் செய்யும் செயல்களே காரணமாக அமையும். எனவே, மற்றஉயிர்களுக்குத் தீங்குசெய்யக் கூடாது. அறவழியில் வாழவேண்டும். நாம் வாழ்கின்ற காலத்தில் மற்றவர்க்கு உண்ண உணவும், உடுக்க உடையும் முடிந்தவரை கொடுத்து, உதவி செய்து வாழவேண்டும், என்பதை புறநானூற்றுப் பாடல்கள் நமக்கு பாடம் புகட்டுகின்றன.

## துணைநூற் பட்டியல்:

1. ஞா மாணிக்கவாசகனஇ புறநானூறு மூலமும் உரையும்இ உமா பதிப்பகமஇ சென்னை 1998.
2. ச.வே.சுப்பிரமனியன்இ சங்க இலக்கியம் கலித்தொகை-மூலமும் உரையும்இ மணிவாசகர் பதிப்பகம்இ சென்னை 2010.
3. முனைவர் கு வெ பாலசுப்பிரமனியன்இ சங்க இலக்கியம் நற்றிணை -மூலமும் உரையுமஇ நியு செஞ்சுரி புக் ஹவுஸ்இ சென்னை 2004.
4. எம் சிவசுப்பிரமணியன் திருக்குறள் குறளும் விளக்கவுரையும்இ கமர்ஷியல் பப்ளிகேசன் சிவகாசி 2012.

Research maGma